பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 6 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசி 07 வியாழக்கிழமை [24-10-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 324

# சபாநாயகர் மீது நேற்று எதிரணிகள் பாய்ச்சல்!

## நாடாளுமன்றில் கூச்சல், குழப்பம் 25 நிமிடங்களில் சபை ஒத்திவைப்பு

கொழும்பு, அக்டோபர் 24

ஸ்ரீலங்கா நாடாளுமன்றம் நேற்றுக்காலை கூடியபோது சபாநாயகர் எம். எச். முகம்மதுவுக்கு எதிராக எதிர்க்கட்சியினர் சபையில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

தமக்கு எதிரான கூச்சல், குழப்பத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் 25 நிமிட நேரத்திலேயே சபாநாயகர் முகம்மது சபையை ஒத்திவைத்தார்.

சபாநாயகர் முகம்மதுவுக்கு எதிராக எதிர்க் கட்சியினர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோல்வி கண்ட பின்னர் நேற்று முதல் தடவையாக சபைக் கூட்டத்துக்கு அவர் தலைமை வகித்தார்.

நாடாளுமன்றத்தின் கணிசமான உறுப்பினர்களின் நம்பிக்கையை சபாநாயகர்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கோப்புகள், காகிதங்கள் பறந்தன!

கொழும்பு, அக். 24

சபாநாயகர் முகம்மதுவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நேற்று சபையில் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது கோப்புகள், புத்தகங்கள் பறந்தன.

சில எதிர்க்கட்சி எம். பிக்கள் சபாநாயகர் மீது புத்தகங்களையும், காகிதங்களையும், கோப்புகளையும் வீசி எறிந்தனர். இதனால் சபையில் காகிதங்கள் நாலாபுறமும் பறந்ததாகத் தெரிய வருகிறது. எதிரணியினர் போட்ட கூச்சல் சபையில் எதிரொலித்த வண்ணம் இருந்தது. (உ-எ-5)

## எதிரணியின் சீற்றத்தைச் சமாளிக்க ஆளும் கட்சியினரால் முடியவில்லை

கொழும்பு, அக். 24

நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குழப்பத்தின்போது எதிர்க்கட்சி எம். பிக்களின் சீற்றத்துக்கு ஆளும் கட்சி எம். பிக்களால் ஈடுகொடுக்க முடியாமல் இருந்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

சபை கூடியதும் எதிர்க் கட்சி எம். பிக்கள் சபாநாயகர் முகம்மது சபைக்குத் தலைமை வகிப்பதை ஆட்சேபித்து எழுந்து நின்று கூச்சல் எழுப்பினர்; அவரைக் கடுமையான வார்த்தைகளால் ஏசினர்; "சபாநாயகர் ஒழிக! ஒழிக!!" என்று கத்தி, அவருக்கு எதிராக வசைமாரி பொழிந்தனர்; அவரைத் தூற்றினர்.

எதிரணியினரின் கூச்சலுக்கு — எண்ணிக்கையில் கூடிய ஆளும் கட்சியினரால் — ஈடுகொடுக்க முடியாது போயிற்று என்று தெரிவிக்கப்பட்டது. (உ-எ-5)

## சபாநாயகர் முகம்மதுவுக்கு எதிராக மீண்டும் பிரேரணை!

### எதிர்க்கட்சிகள் தரப்பில் முஸ்தீபு

கொழும்பு, அக். 24

சபாநாயகர் எம். எச். முகம்மதுவுக்கு எதிராக மீண்டும் — இரண்டாவது தடவையாக — நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைத் தாம் கொண்டுவரப்போவதாக எதிர்க்கட்சிகள் தெரிவித்திருக்கின்றன.

இந்திய வானொலி இத்தகவலை நேற்று வெளியிட்டது.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றை தற்போதைய நாடாளுமன்றக் கூட்டத் தொடரின் போது எதிர்க்கட்சிகள் கொண்டுவந்ததும் —

அது 38 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டதும் தெரிந்ததுவேயே.

நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்ட ஒரு பிரேரணை மீண்டும் அதே நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் கொண்டுவரப்பட முடியாது என்பது சாதாரண நடைமுறை என நாடாளுமன்றத்துடன் தொடர்புடைய வட்டாரங்கள் சுட்டிக் காட்டின.

எனவே, மீண்டும் சபாநாயகருக்கு எதிராக ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவதாயின் அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பமாகும் வரை எதிர்க்கட்சிகள் காத்திருக்க வேண்டியிருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. [உ-எ]

## உண்ணாவிரதத்தை கைதிகள் கைவிட்டனர்!

### அரச தரப்பில் அறிவிப்பு

கொழும்பு. அக். 24

களுத்துறைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகள் தங்கள் உண்ணா விரதத்தைக் கைவிட்டு விட்டனர் என்று ஸ்ரீலங்கா அரச தரப்பில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கைதிகளின் உண்ணா விரதம் தொடர்பாக அரசுக்கு

[3 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு நீக்கம்!

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுப் பிற்பகல் 2 மணியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாக பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டுத் தலைமை அலுவலகம் நேற்று அறிவித்தது.

எனினும் கிளிநொச்சி மாவட்டம் மற்றும் வவுனியா மாவட்டத்தில் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசம் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் தொடர்ந்து ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்து வருவதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கிறது. [உ-எ]

## ஆலடிப் பகுதியில் படையினர் தரிப்பு!

யாழ்ப்பாணம், அக். 24

கடல் வழியாகத் தரை இறக்கப்பட்டு பூநகரிப் பக்கமாக முன்னேறிய படையினர் தற்போது ஆலடிப் பகுதியில் நிலை கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

அனேகமாக அப்பகுதியில் அவர்கள் முகாமிடுவதற்கு முயற்சிக்கக் கூடும் என்று சந்தேகிக்கப்படுகிறது.

ஆனால் மழை காலத்தில் முகாமிட்டிருப்பதற்கு அப்பகுதி உகந்ததல்ல என்பதும் — அங்கு போதிய கட்டட வசதிகள் ஏதும் இல்லை என்பதும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இதனிடையில் —

பூநகரிக்கு ஏழு கிலோ மீற்றர் தூரத்தில் — யாழ்ப்பாண ஏரியின் தென் பகுதிக்குக் குறுக்கே ஆனையிறவுத் திசையில் 20 கிலோ மீற்றர் தூரத்தில் — படையினர் நிலை கொண்டிருப்பதாக 'லங்காபுவத்தை' மேற்கோள் காட்டி இலங்கை வானொலி அறிவித்தது. [உ-எ]

## 15 படகுகள் அழிப்பு!

கொழும்பு அக். 24

சங்குப்பிட்டி இறங்குதுறைப் பக்கத்தில் 15 படகுகளைப் படையினர் அழித்திருப்பதாகச் சந்தேகிக்கப்படுகிறது.

பூநகரியைக் கைப்பற்றியதை அடுத்து, அப்பகுதியில் இருந்த — விடுதலைப் புலிகளின் — சுமார் 15 படகுகளைத் தாம் அழித்துவிட்டதாக கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

யாழ். குடாநாட்டை முற்றுகையிட்டிருப்பதால், விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற முடியாத நிலையை ஏற்படுத்துவதில் தாம் முழுமையாக வெற்றி பெற்றுவிட்டோம் என்றும் இராணுவத் தரப்பில் கூறப்பட்டதாம். [உ-எ]

## முற்றுகை முயற்சியில் 10 ஆயிரம் படையினர்!

யாழ்ப்பாணத்தை முற்றுகையிடும் இராணுவ நடவடிக்கையில் சுமார் பத்தாயிரம் அரசுப் படையினர் ஈடுபட்டிருப்பதாக கொழும்புச் செய்திகளை மேற்கோள் காட்டி இந்திய வானொலி அறிவித்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து வெளியே செல்வதற்கான தரை மார்க்கப் பாதைகள் அனைத்தையும் பாதுகாப்புப் படையினர் இப்போது தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர் என்று கொழும்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. (உ-எ)

## 3 படையினர் பலி! ஐவர் படுகாயம்!!

யாழ்ப்பாணம், அக். 24

பூநகரிப் பகுதியைக் கைப்பற்ற நடந்த சண்டையில் படையினர் மூவர் கொல்லப்பட்டனர் என்றும் ஐந்து படையினர் கடுமையான காயங்களுக்கு இலக்காகினர் என்றும் நேற்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன:

இதே சமயம்—

பூநகரிப் பகுதியில் நேற்று சண்டை ஏதும் இடம்பெற்றதா என்பது குறித்தும்—

படையினர் நகர்வில் முன்னேற்றம் ஏதும் இருந்ததா என்பது பற்றியும் தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

## யாழ். நகரப் பகுதியில் நேற்று வழமை நிலை

யாழ்ப்பாணம், அக். 24

யாழ் நகரிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் நிலைமை நேற்று வழமைக்குத் திரும்பி இருந்தது.

நேற்றிரவு இச்செய்தி எழுதும்வரை யாழ். நகரிலோ, குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலோ பாரதூரமான சம்பவங்கள் ஏதும நிகழ்ந்ததாகத் தகவல்கள் கிடைக்கவில்லை;

போர் விமானங்களின் இரைச்சல், ஹெலிகளின் ரோந்து என்பன மிகக் குறைவாக இருந்தன;

இதனால் இடம் பெயர்ந்த மக்கள் பலர் மீண்டும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பிக்கொண்டிருந்தனர்.

[ஒ-181]

## காயமுற்ற சிறுவன் பலி

யாழ்ப்பாணம், அக். 24

யாழ். கொட்டடிப்பகுதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஷெல் தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சினிவாசகம் வீதியைச் சேர்ந்த பரமநாதன் சுசநாதன் [வயது 9] நேற்று இரவு அங்கு மரணமானார். [ஒ-15]

## பீரங்கித் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக் 24

சேந்தான்குளம், கீரிமலை கடற்பிராந்தியத்தில் இருந்து நேற்று முற்பகல் 11 மணியளவில் கடற்படையினர் குடியிருப்புக்களை நோக்கி பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை காரைநகர், வலந்தலை பகுதியில் இருந்தும் படையினர் பொன்னாலைப் பகுதியை நோக்கி தொடர்ச்சியாக வேட்டுக்களைத் தீர்த்தனர்.

சேத விவரங்கள் தெரியவரவில்லை. [ஒ-15]

## அகதிகளுக்கு வயிற்றோட்டம்

யாழ்ப்பாணம், அக். 24

யாழ்ப்பாணப்பகுதி அகதி முகாம்களில் வயிற்றோட்ட நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்நோயினால் பாதிக்கப்பட்ட நிலையில் அகதி முகாம்களில் இருந்து, பத்துக்கும் அதிகமான நோயாளிகள் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ஒ-15)

## இராணுவம் சூடு; இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், அக். 24

பலாலி முகாமில் இருந்து நேற்று மாலை 6-30 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு ஏழாலையில் வீட்டுமுற்றத்தில் கதைத்துக் கொண்டிருந்த இளைஞன் காயமடைந்தார்.

இராசையா சிவகுமார் (வயது 16) என்பவரே காயமடைந்தவராவார். [ஒ-15]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், அக், 24

மணலாறு, நித்திகைக்குளம் பகுதியில் கடந்த மாதம் 25 ஆம் திகதி நடந்த சண்டையில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த வீரவேங்கை மைக்கேல் [கந்தையா சுரேஷ்-திருமலை] நேற்று வீரமரணம் அடைந்துவிட்டார். [ஒ-]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

முதல் தரமான ஜேர்மன் செப்பேட் ஏழு கிழமைக் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. முற்பணம் கட்டியவர்கள் 25 ஆம் திகதிக்கு முன் குட்டிகளை எடுத்துச் செல்லவும். சேவியர் 249, பலாலி வீதி, கந்தர்மடம்.

[18529]

### தேவை

வேப்பம் விதை இலுப்பம் விதை பெருமளவில் வாங்குகிறோம். மில்க்வைற், யாழ்ப்பாணம்.

[சி/0847]

### இடமாற்றம்

புங்குடுதீவில் இயங்கிவந்த "இரட்ணம் வைத்திய சாலை" சகல வசதிகளுடன் இல. 129, ஸ்ரேசன் றோட் (புகையிரத நிலையம் முன்பாக) யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து சேவையாற்றுகிறது. தீவகத்தில் வழங்கப்பட்ட சிறந்த வைத்திய சேவை தொடர்ந்து வழங்கப்படும்.

(18531)

தீவகத்தில் காரைநகர், வேலணை, புங்குடுதீவு, ஆகிய இடங்களில் இயங்கி வந்த "பாக்கியம் குழந்தைகள் வைத்திய சாலை" இருபாலைச் சந்திக்கு அருகாமையிலுள்ள 'குமரபுரம்' இல்லத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

(18534)

### காணவில்லை

J 2186558 புதிய பெண்கள் துவிச்சக்கரவண்டி 22-10-91 இல் யாழ்ப்பாணம் மரக்கறிச் சந்தியருகில் 687520092 V இலக்க அடையாள அட்டையுடன் களவு போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் T R P ஏஜென்ஸ் 65, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(4358)

### ரைப்ரைட்டர்

Typewriters தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும், தமிழ் - ஆங்கில தட்டச்சு வேலைகளுக்கும், பியூட்டோ, 39/17, மின்சார நிலைய வீதி 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம்.

[சி/0687]

## இந்தியாவுக்கு 1,000 கிலோ தேயிலை இலங்கை அன்பளிப்பு

கொழும்பு, அக். 24

இந்தியாவில் அண்மையில் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியில் உயிருக்கும், உடைமைக்கும் ஏற்பட்டுள்ள நாசம் குறித்து இலங்கை ஜனாதிபதி திரு. பிரேமதாசா தனது கவலையை இந்திய அரசுக்குத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் துயர் துடைப்புக்கென இலங்கை அரசு 1,000 கிலோ தேயிலையையும் வழங்கியுள்ளது.

[அ]

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை.**

**மருத்துவ பீடம்**

மூன்றாவது மருத்துவப் பீட [பகுதி 11] பரீட்சை – 1991 [டிசம்பர்]

மூன்றாவது மருத்துவப் பீட (பகுதி 11) பரீட்சை [1985 பிரிவு] 26 - 12 - 1991இல் ஆரம்பமாகவுள்ளது.

– பதிவாளர்.

(சி-0848)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 24 01-1949

மறைவு: 25-10 1988

திதி: 24-10-1991

**சிவசிதம்பரப்பிள்ளை சிவராஜபிள்ளை (புளோரா)**

இந்நாளில் தங்களை நினைவு கூரும்:

மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மற்றும் குடும்பத்தினர்.

வல்லை ஒழுங்கை, மல்லாகம்.

[18539]

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 05 - 09 - 1969

உதிர்வு: 24 - 09 - 1991

**செல்வி இராஜேஸ்வரி தம்பிராசா**

(தொழில் பயிலுனர் யாழ். பல்கலைக்கழகம், NCAT [ஆங்கிலம்] 1ஆம் வருட மாணவி, யாழ். தொழில்நுட்பக் கல்லூரி)

எவர் மனதும் புண்படா வாக்கிலாங்கே,
இன்மொழியே பேசுமெம் நண்பி!
வளரும் பயிராய் நீவரும் வேளையிலே,
முன்வந்து உன்னை அழைத்தானே காலன்!
பண்பான உன்வார்த்தை மறக்கும் வகையறியோம்
துன்பத்தால் இங்குநாம் துரும்பாய்த் தவிக்கிறோம்
தெம்புதர எழுந்து நீ வாராயோ!

"உன் ஆத்மா சாந்தியடையட்டும்"

யாழ் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம். — பிரிவால் துயருறும் சக தொழில் பயிலுனர்கள்

(18538)

## யாழ். மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கம்

27-10-1991 ஞாயிறு நடைபெறவிருந்த மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 16 11 1991 சனிக்கிழமைக்குப் பின்போடப்பட்டுள்ளது.

சி. மு. தியாகராசா, [கௌரவ செயலர்.]

[18539]

சிவமயம்

## ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பிரசோற்பத்தி வருஷம் ஐப்பசித் திங்கள் 8 ஆம் நாள் 25 - 10 - 1991 | வெள்ளிக்கிழமை மாலை 4-40 மணி முதல் 6-40 மணி வரையிலான கார்த்திகை நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய கும்ப லக்கின சுபமுகூர்த்த வேளையில்

| | | |
|---|---|---|
| எமது புதல்வன் திருநிறை செல்வன் **ஆனந்தகரன்** அவர்களுக்கும் | ★ ★ ★ ★ | எமது புதல்வி திருநிறை செல்வி **பாமினி** அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு திருமணம் நடாத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமண மண்டபம்: Rommen Skole, Karen Platous Vei 31 Oslo 9, Norway.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்.

| | |
|---|---|
| திரு. திருமதி சி. சதானந்தன், (இளைப்பாறிய தபாலதிபர்) 35 விபுலானந்தர் வீதி அரியாலை, யாழ்ப்பாணம் | திரு. திருமதி க. இ. வேலாயுதபிள்ளை, (இளைப்பாறிய உதவி அதிபர், கிராமத்தொழில் திணைக்களம்) வீமன்காமம், தெல்லிப்பளை. |
| திரு. திருமதி சதா ஸ்ரீதரன் (நோர்வே) | திரு. திருமதி வே. தயாளன் (நோர்வே) |

செல்வி பரமேஸ்வரி சின்னத்துரை (நோர்வே)

[4355]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட பிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கங்களின் சமாசம்

போர்க்காலத்தை முன்னிட்டு மறு அறிவித்தல் வரும் வரை புதன், ஞாயிறு விடுமுறைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

தலைவர்,
அ. ஞானப்பிரகாசடாஸ்.

இல. 1083,
கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி.

[18535]

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 20 - 06 - 1958

உதிர்வு: 29 - 10 - 1985

திதி: 24-10 1991

**அமரர் கருணைப்பிரகாசம் ஜெயப்பிரகாசம் (ஜெயா)**

[தொண்டமானாறு]

அப்பாவும், அம்மாவும் ஆசைத் தங்கையர் ஐவருமாய்
இப்பிறப்பில் ஒரு தம்பியோடு இங்கிருந்து வாடுகின்றோம்
ஆண்டு ஆறாகியும் ஆறுமோ நெஞ்சங்கள்
மீண்டும் உனைக்காணும் நன்னாளும் வந்திடுமோ
இலங்கை இராணுவத்தின் இரக்கமற்ற கெடுபிடியால்
கலங்கிடும் இதயங்கள் கண்ணீரால் நனைந்திடுமோ
குடும்ப விளக்கே, குலமகனே ஜெயா! நாம்.
படும்பாடு நீயறியாய், பாவிகள் நாமிங்கு.

அப்பா, அம்மா, தங்கைகள், தம்பி.

பருத்தித்தலட்டி,
சுன்னாகம்.

(18523)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. நைமிற் செல்வத்துரை கிருபராஜா**

தோற்றம்: 3 - 5 - 1928

மறைவு: 24 - 10 - 1987

நான்காண்டு மறைந்தும்
நம் நாவிலெழுகிறது உம்நாமம்
அன்பராக உம்மை எங்களுக்களித்தது
ஆண்டவரின் கிருபை
இன்பமாக வாழ்வதைக் கண்டிறைவன்
இளைப்பாற அழைத்தது தன்னருகே
என்றும் உங்கள் ஆன்மா சாந்திபெற
எங்கள் இயேசுராஜன் பாதம் பணிகின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், தாய், மாமி,
சகோதரர்கள், சகோதரிகள்,
பிள்ளைகள்.

திருமதி எஸ். கிருபராஜா,
"கிப்றோன்" சேர்ச்றோட்,
சங்கானை.

[4348]

# உதயன்

## இன்னும் நகரவில்லை

ஸ்ரீலங்காப் படையினர் இம் மாதம் 17 ஆம் திகதி தமது 'ஒப்பரேஷன் வலம்புரி' இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர்.

முதலில் வடமராட்சியிலும் பின்னர் தீவுப்பகுதிகளிலும் பெரும் எடுப்பில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்போவதாகக் காட்டிக் கொள்ளப்பட்டது. பின்னர் பூநகரிவரை இராணுவம் நகர்த்தப்பட்டது.

வடக்கின் பிரதான போக்குவரத்துப் பாதையில் அமைந்துள்ள சங்குப்பிட்டி இறங்குதுறையில் தற்போது படையினர் நிலைகொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கில் தற்போது நடைபெறும் 'ஒப்பரேஷன் வலம்புரி' இராணுவ நடவடிக்கை முன்னைய இராணுவ நடவடிக்கைகளைவிட நோக்கங்களில் வேறுபட்டதாகத் தெரிகிறது.

யுத்த தந்திரங்களுடன் மக்களைப் பீதி அடையச் செய்வதும், குழப்பம் அடையச் செய்வதும் படையினரின் நோக்கம்போல் தெரிகிறது.

குடாநாட்டில் குடியிருப்புப் பகுதிகளை அண்டிய பிரதேசங்களில் இந்த இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாலும்—

சில மாத இடைவெளியின் பின்னர் மீண்டும் குடியிருப்புப் பகுதிகள் அடிக்கடி விமானக் குண்டுவீச்சுக்கு உள்ளாவதாலும்—

பாதுகாப்பு வலயத்துக்கே அச்சுறுத்தல் ஏற்படும் விதத்தில் பாதுகாப்புவலயத்துக்குச் சமீபமாக குண்டுவீச்சுக்கள் இடம்பெறுவதாலும்— மக்கள் பீதி அடைவது இயல்பானதே.

அத்துடன் அரசின் பிரசாரப் பீரங்கிகளில் ஒன்றான வானொலி மூலம் மக்கள் மனக் குழப்பம் அடையத் தூண்டப்படுகிறார்கள்.

வதந்திகளையும், விசமப் பிரசாரங்களையும் மக்கள் நம்பக் கூடாது. குழப்பம் அடையச் செய்து வேடிக்கை பார்ப்பதில் "இன்பம்" காணும் தீய சக்திகளும் நம்மிடையே உள்ளன நடக்காதது ஒன்றை நடந்ததாக நினைத்து மனம் பேதலிப்பதாலும். ஏக்கமடைவதாலும், பதற்றம் அடைவதாலும் மக்களின் மனநிலையும் அதனால் உடல் வலுவும் வீணாகப் பாதிக்கப்படும். அதுவும் கடந்த பதினேழு மாதங்களாக உணவுத் தட்டுப்பாட்டினால், போஷாக்கான உணவுகளை உட்கொள்ள முடியாமல் ஏற்கனவே உடற்பலம் குன்றியுள்ள மக்கள் மேலும் பாதிக்கப்படுவர்.

ஆகையால் உண்மை எது, வதந்தி எது என்பதை நன்கு இனங்காணும் அளவுக்கு மக்களுக்கு மனஉறுதி வேண்டும். சிறிய சத்தம் கேட்டாலும் மூடை முடிச்சுகளை எடுத்துக் கொண்டு ஓடும் நிலைக்கு மனப் பீதியை உருவாக்கிக் கொள்ளக்கூடாது, ஆனால் குண்டு வீச்சு எறிகணைத் தாக்குதல் என்பவற்றில் இருந்து தங்களைப் பாதுகாப்பதில் கவனமும் முன்னெச்சரிக்கையும் தேவை.

அரசியல் தீர்வு குறித்து ஜனாதிபதி அடிக்கடி கூறி வந்த போதிலும் ஆனையிறவு யுத்தத்திலும், மணலாறு யுத்தத்திலும் விடுதலைப் புலிகள் பலவீனம் அடைந்திருக்கலாம் என்ற கணிப்புடனேயே அரசு இப்போது செயற்படுவதாகத் தோன்றுகிறது.

இராணுவ மேலாதிக்கத்தில் இருந்து கொண்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். என்ற நிலைப்பாட்டிலிருந்து அரசு இன்னும் இம்மியும் நகரவில்லை என்பதே அர்த்தமாகும்.

## ஊர்காவற்றுறை மக்களுக்கான உலர் உணவு விநியோகம்

யாழ்ப்பாணம், அக். 24

ஊர்காவற்றுறைப் பகுதி மக்களுக்குரிய அக்டோபர் மாத உலர் உணவு, யாழ். நகரில் உள்ள ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் இன்று வியாழன் முதல் விநியோகிக்கப்படும்.

யாழ். கே. கே. எஸ். வீதி ஜெமினி மாபிக்சர் பலஸிலும், ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையிலும் அமைந்துள்ள கிளைகளில் வைத்து உலர் உணவு விநியோகிக்கப்படும்.

1ஆம், 2ஆம், 7ஆம் இலக்கக் கிளைகளுக்கு இன்று 24ஆம் திகதியும், எதிர்வரும் 28ஆம் திகதியும் —

2ஆம், 6ஆம், 8ஆம் இலக்கக் கிளைகளுக்கு நாளை 25ஆம் திகதியும், 29ஆம் திகதியும் —

3ஆம், 9ஆம், 10ஆம் இலக்க கிளைகளுக்கு எதிர்வரும் 26ஆம், 30ஆம் திகதிகளிலும் —

5ஆம், 6ஆம், 11ஆம், 13ஆம் இலக்க கிளைகளுக்கு எதிர்வரும் 27ஆம், 31ஆம் திகதிகளிலும் மேற்படி உலர் உணவு விநியோகம் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

## வர்த்தகர்கள் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், அக். 24

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல கொழும்பு லொறிச் சேவை உரிமையாளர்கள், நெல்குற்றும் அரிசி ஆலை உரிமையாளர்கள், மொத்த நிலைய பொருள் விற்பனையாளர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் அனைவரையும் இன்று பிற்பகல் 3 மணிக்கு, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் கேட்டுள்ளனர். (ஓ)

## ப. நோ. கூ. ச. தலைவர்கள் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 24

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல ப. நோ. கூ. சங்க தலைவர்கள், பொது முகாமையாளர்கள் அனைவரையும் இன்று முற்பகல் 10 மணிக்கு, யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்திற்கு வருகை தருமாறு கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளனர். (ஓ)

## கௌதாரிமுனைப் பகுதியிலிருந்து அரியாலை கிழக்கிற்கு அகதிகள்

யாழ்ப்பாணம், அக். 24

தற்போது இராணுவம் தரை இறங்கி உள்ள கௌதாரிமுனையை அண்டிய பகுதிகளில் இருந்து சுமார் 300 குடும்பங்கள் இடம்பெயர்ந்து வந்து அரியாலை கிழக்குப் பகுதியில் தங்கி உள்ளன.

இராணுவ நடவடிக்கை ஆரம்பமாக முன்னரே இவர்கள் சங்குப்பிட்டி — கேரதீவு ஊடாக இங்கு வந்து சேர்ந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

இவர்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகளை யாழ். செயலகம் மேற்கொண்டுள்ளது. (இ-5)

## உணவுக் கப்பலை அனுப்பக் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 24

வடக்கே உணவுக் கப்பல்களைத் தொடர்ந்து அனுப்பி வைக்குமாறு யாழ். அரச அதிபர் நேற்று கொழும்பு புனர்வாழ்வு அமைச்சிடம் கோரிக்கை விடுத்தார்.

தற்போதைய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெயர்ந்துள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (இ-5)

## உணவு வழங்க விரும்புவோர் முன் ஏற்பாடு செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 24

இடம் பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு சமைத்த உணவை வழங்க விரும்பும் பொது ஸ்தாபனங்கள், நிறுவனங்கள், பாடசாலை மாணவர் அமைப்புகள் போன்றவை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பணிமனையுடன் தொடர்பு கொண்டபின் உணவுப் 'பார்சல்'களை விநியோகிக்குமாறு அதன் நிர்வாக அலுவலர் கேட்டிருக்கிறார்.

இடம்பெயர்ந்த மக்களுக்குச் சமைத்த உணவை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் தற்சமயம் வழங்கி வருகிறது.

இதேவேளை முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு பொது ஸ்தாபனங்கள் பலவும் உணவும் பார்சல்களை விநியோகித்து வருகின்றன. இதனால் சில சமயங்களில் உணவுப் பார்சல்கள் விரயமாகும் நிலை ஏற்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (உ-5)

## செஞ்சிலுவைக் கூட்டம்

யாழ்ப்பாணம், அக். 24

செஞ்சிலுவைச் சங்க ஊர்காவற்றுறைப் பிரிவு அங்கத்தவர்களுக்கான கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கண்டுக்குளி [illegible] நடைபெறும்.

## மத்திய தரை கடலில் புலிகள் வாங்கிய கப்பல் நடமாடுவதாக அதிகாரி கூறுகிறார்

விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன் இரு நடுத்தர அளவுள்ள கப்பல்களைக் கொள்வனவு செய்தார் என்று உளவு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இவற்றில் ஒன்று மலேஷியாவில் பிடிபட்டு விட்டது. அடுத்தது மத்திய தரைக் கடலில் நடமாடிக் கொண்டிருக்க வேண்டும். பாதுகாப்புக் காரணங்கள் கருதி இக்கப்பல்களின் பெயர்களை வெளியிட முடியாது.

இவ்வாறு இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த வைஸ் அட்மிரல் ஆனந்த சில்வா தெரிவித்துள்ளார்.

கடற்படையில் 38 வருட காலம் சேவையாற்றிய ஆனந்த சில்வா எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதியிலிருந்து ஓய்வு பெறுகிறார். (த)

## உண்ணா....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முறையிடப்பட்டிருக்கிறது.

இச் சிறைச்சாலையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 248 கைதிகள் உள்ளனர்.

இக்கைதிகள் முதலில் இம் மாதம் 11ஆம் திகதி உண்ணாவிரதம் இருந்தனர். ஆனால் அதனை அவர்கள் 12 ஆம் திகதி கைவிட்டனர்.

மீண்டும் அவர்களில் 8 பேர் திடீரென்று உண்ணாவிரதத்தில் குதித்தனர்; பின்னர் மேலும் 16 பேர் அவர்களுடன் சேர்ந்து கொண்டனர்.

அந்த 24 கைதிகளும் பின்னர் பிரிக்கப்பட்டனர். இதற்கு ஆட்சேபம் தெரிவிக்குமுகமாக எஞ்சிய கைதிகளும் உண்ணாவிரதத்தில் சேர்ந்து கொண்டனர்.

ஆனால் அனைவரும் தற்போது உண்ணாவிரதத்தைக் கைவிட்டு விட்டனர்.

உண்ணாவிரதமிருந்த சில கைதிகளின் உடல்நிலை மோசமடைந்துள்ளது எனக் கூறப்படுவது தவறாகும்.

பாதுகாப்பு அமைச்சின் விசாரணை மற்றும் நீதிமன்ற வழக்கு விசாரணை ஏதுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்தே இக்கைதிகள் உண்ணாவிரதமிருந்து வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இத்தகவலும் கூட தவறானது ஆகும்.

இக்கைதிகளுக்கு எதிரான விசாரணை நடந்து வருகின்றது; ஒவ்வொரு கைதி பற்றியும் தனித்தனி அறிக்கைகள் சி. ஐ. டியினரிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

இவ்வறிக்கைகள் கிடைத்ததும் இக்கைதிகள் பற்றிய விசாரணையை ஆலோசனைச் சபை நடத்தவுள்ளது.

விசாரணையைத் துரிதப்படுத்தும்படியும்—

குற்றமற்றவர்கள் என்று காணப்படுவோரை விடுவிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்கும்படியும் ஆலோசனைச் சபையினர் கோரப்பட்டுள்ளனர்.

—இவ்வாறு அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## சபாநாயகர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முகம்மது இழந்து விட்டார் என்றும்—

ஆனால் அவர் தலைமை வகிக்கும் எந்தக் கூட்டத்தையும் தாங்கள் ஏற்கப்போவதில்லை என்றும் எதிர்க்கட்சியினர் சில தினங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததுவே;

தமது அறிவிப்புப்படி நேற்று சபாநாயகர் முகம்மது சபைக்கு வந்ததும் எதிரணியினர் ஆக்ரோஷமாக கூச்சல் எழுப்பி, ஆர்ப்பாட்டம் செய்து சபைக் கூட்டத்தை சபாநாயகர் முகம்மது நடத்த விடாது குழப்பினர்.

அதனையடுத்து சபையை [illegible] சபாநாயகர் ஒத்தி வைத்தார். [உ-எ-5]

## "டெஸப்" வகுப்புகள்

யாழ்ப்பாணம், அக். 24

யாழ் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி ஆகியவற்றில் நடைபெற்றுவரும் யாழ். "டெஸப்" (TACEP) வகுப்புகள் தொடர்ந்து நடைபெறுவதாக மாநில நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (த)

## திட்டமிட்டபடி ஜீ. சி. ஈ. பரீட்சை

கொழும்பு, அக். 24

ஜீ. சி. ஈ. சாதாரணப் பரீட்சை எதிர்வரும் டிசம்பர் 9 ஆம் திகதி திட்டமிட்டபடி வடக்கு - கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் நடத்தப்படும் என்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். (த)

## நிர்வாக சேவை பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, அக். 24

எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாக இருந்த இலங்கை நிர்வாக சேவைகள் தகுதிகாண் பரீட்சை அடுத்த மாதம் 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அறிவித்துள்ளார். [த]

## துப்பாக்கியுடன் ஐ. நாவிற்குள் நுழைய முயன்றவர்

வாஷிங்டன் அக். 24

சுழல் துப்பாக்கி மற்றும் ஆயுதங்களுடன் ஐக்கிய நாடுகள் சபைக்குள் புக முயன்ற நபர் ஒருவர் அதிகாரிகளிடம் சிக்கினார் என்று அறிவிக்கப்படுகிறது. [த]

## தொழிலாளர் மூவர் காயம்

யாழ்ப்பாணம், அக். 24

யாழ். ஸ்ரான்லி வீதி, மணியம் கட்டடத்திலுள்ள ப. நோ. கூ. சங்க களஞ்சியத்தில் மூடைகள் சரிந்து விழுந்ததில், அதில் சிக்குண்டு மூவர் படுகாயமடைந்தனர்.

சங்கத்தின் வகுப்புத் தொழிலாளர்களான புங்குடுதீவைச் சேர்ந்த செல்வம், கந்தசாமி மற்றும் காரைநகரைச் சேர்ந்த வைத்தி என்பவர் ஆகியோரே காயமடைந்தனர்.

இவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். [ஓ-13]

## அகதிப் பெண்ணை பாம்பு தீண்டியது

யாழ்ப்பாணம், அக். 24

தீவுப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த ஒருவர் தஞ்சமடைந்த இடத்தில் பாம்புக்கடிக்கு இலக்கானார்.

யாழ் இந்துக் கல்லூரியில் நேற்று இரவு 7 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் புங்குடுதீவைச் சேர்ந்த செல்வராசா ஜெயராணி (வயது 15) என்பவரே பாம்புக்கடிக்கு இலக்கானார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [ஓ-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துப்பாக்கிகள் அபேஸ்!

பஞ்சாப் மாநில லுதியானா மாவட்டத்தில் பனாஹா கிராமவாசிகளிடம் இருந்த பத்துத் துப்பாக்கிகளை செவ்வாயன்று தீவிரவாதிகள் கைப்பற்றினர்.

கிராமவாசிகளின் பாதுகாப்புக்கென பொலீஸாரால் இந்த ஆயுதங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. (ஒ)

# ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் பிளவு ஏற்படும் ஆபத்து!

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் மீண்டும் உட்பூசல் தீவிரமடைந்திருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

கட்சிப் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து திரு. அனுரா பண்டாரநாயக்கா வின் தீவிர ஆதரவாளரான திரு. ஜே. ஆர். பி. சூரியப்பெருமாவை நீக்க கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா எடுத்த முடிவைத் தொடர்ந்து கட்சிக்குள் ''குற்ற நிலைமை அதிகரித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கட்சி பிளவுபடும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

திரு. சூரியப்பெருமா பதவி நீக்கம் செய்யப்பட்ட சமயம் திரு. அனுரா பண்டார நாயக்கா கொழும்பில் இல்லை. வெளியூரில் இருந்த அவர் விஷயம் கேள்விப்பட்டு அவசரமாகக் கொழும்பு திரும்பி தமது ஆதரவாளர்களுடன் கூட்டம் நடத்தினார்.

''கட்சியை முதலில் காப்பாற்ற வேண்டும். அடுத்தவர் தூண்டுதலினால் கட்சியை அழிக்க அக்கறையுள்ள சிலர் எடுக்கும் முயற்சிகளுக்கு இடமளிக்கக்கூடாது'' — இப்படி திரு. அனுரா அக்கூட்டத்தில் சொன்னார்.

### கே. ஜி. பி. சதி

இது ஒரு கே ஜி பி. [KandyanGovigamaBuddhist] சதி என்று சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் குற்றஞ்சாட்டினார்.

இதன் பின்னர் கடந்த வியாழன் காலை கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நடந்தது. அங்கு மகனுக்கும் தாய்க்கும் சூடான விவாதம் இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது.

சூரியப்பெருமாவை பதவி நீக்கம் செய்த காரணத்தை சிறிமாவிடம் அனுரா கேட்டார்.

''கட்சித் தலைவர் என்ற முறையில் பதவி நீக்கம் செய்தேன்'' — என்று சிறிமா பதிலளித்தார்.

''சர்வாதிகாரி மாதிரி நடக்கிறீர்கள். உங்களுக்காக வேலை செய்தவர்களை இப்படியா நடத்துவது?'' — என்று அனுரா அம்மாவைப் பார்த்துக் கேட்டார்.

### கட்சித் தலைவி மீது நடவடிக்கை

பதவி நீக்கத்திற்கு அரசியல் காரணம் ஏதேனும் உண்டா என்று அனுரா கேட்டார்.

ஐ. தே. க. தேசியப் பட்டியல் மூலம் சூரியப்பெருமா எம். பியாகலாம் என்ற 'அந்த' செய்தியை சிறிமா மறைமுகமாகச் சுட்டிக்காட்டினார்.

அனுரா குறுக்கிட்டு — ''கட்சியை நடத்தும் விதம் குறித்து ஆண்டுக்கு ஒரு தடவை வீதம் 31 தடவைகள் (1960 முதல் 1991 வரை) கட்சித் தலைவி மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்'' — என்று கூறினார்.

''முயற்சித்துப் பார்'' — என்று மகனுக்கு சிறிமா சவால் விட்டார்.

### நான் இன்றி கட்சி இல்லை

அக்கட்டத்தில் கடும் நடவடிக்கைகள் எடுக்கவேண்டாம் என்று எம். பிக்களான மஹிந்த ராஜபக்ஸாவும், சி. வி. குணரத்தினாவும் திருமதி சிறிமாவைக் கேட்டனர்.

யு. என். பிக்கெதிரான இயக்கம் நடந்துகொண்டிருக்கையில் கட்சியை பிளவுபடுத்தக்கூடாது என்று அவர்கள் கூறினர்.

ஆனால் சிறிமாவோ பதவி நீக்க விஷயத்தில் பிடிவாதமாக இருந்தார்.

''நிலைமை மோசமானால் நான் கட்சியைக் கலைத்து விடுவேன். ஏதாவது கட்சி ஒன்றில் சேர்ந்துகொள்ளும்படி நான் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வேன்.'' — இப்படி சிறிமாவோ ஐந்து தடவைகளுக்குக் குறையாமல் அடிக்கடி திருப்பித் திருப்பிச் சொன்னார்.

''நான் இன்றி கட்சி இல்லை.'' — இப்படி சிறிமா வலியுறுத்தினார்.

''இதுதான் உங்கள் நினைப்பு என்றால், பிரேமதாஸாவுடன் உங்களை ஒப்பிடும்போது பிரேமதாஸ ஒரு தேவதையாக (angel) தெரிவார்'' — இப்படி அம்மாவைப் பார்த்து அனுரா திருப்பிச் சொன்னார்.

இந்தக் கட்டத்தில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் மஹிந்த ராஜபக்ஸா, பொதுச் செயலாளர் பதவிக்கு அனுரா பண்டாரநாயக்காவின் பெயரைப் பிரேரித்தார். எதிரணியினர் தர்மசிறி சேனநாயக்காவின் பெயரைப் பிரேரித்தனர்.

திருமதி சிறிமாவுக்கு இது திகைப்பை ஏற்படுத்தியது.

''உபதலைவராக இருந்து கொண்டு பொதுச் செயலாளர் பதவியை எப்படி வகிக்கப் போகிறீர்?'' இப்படி சிறிமா கேட்க —

''உபதலைவர் பதவியை இராஜினாமாச் செய்கின்றேன்'' — என்றார் அனுரா.

### தாய் — தலைவி மகன் — செயலாளர்

''தலைவி தாய், பொதுச் செயலாளர் மகன் என்றால் நாடே சிரிக்கும் அல்லவா?'' — என்று அம்மா கூற —

''இந்தியாவில் நேருஜி தலைவராக இருந்தபோது இந்திரா காந்தி காங்கிரஸின் செயலாளராக இருந்தார். இந்திரா, காங்கிரஸின் தலைவராக இருந்தபோது முதலில் சஞ்சேயும் பின்னர் ராஜீவும் செயலாளராக இருந்தார்களே'' ஹலீம் இஷாக் சுட்டிக் காட்டினார்.

இறுதியில் தர்மசிறி சேனநாயக்கா ஐந்து தினங்கள் மட்டும் தற்காலிக பொதுச் செயலாளராக இருப்பது என்றும் —

நேற்றைய தினத்துக்கு முன்னர் இப்பிரச்சினையின் இணக்கம் காண நான்கு பேர் கொண்ட குழு ஒன்றை நியமிப்பது என்றும் முடிவாகியது. [உ-எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-10-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நாகேஸ்வரி தம்பிராஜா

திருமதி நாகேஸ்வரி தம்பிராஜா 20-10-1991 ஞாயிறு கொழும்பில் காலமானார். அன்னார் முன்னாள் பிரதம கணக்காளர் தம்பிராஜாவின் அருமை மனைவியும், Dr. ரகுபதி (நியூசிலாந்து), திருமதி திரவியம் பூபாலசிங்கம் (U.K.), Dr. பாலேந்திரா (சிங்கப்பூர்), Dr. நாகேந்திரா (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும், பூபாலசிங்கம் (பொறியியலாளர் U.K.) Dr. வல்லிநாயகி, அருணா, றேகா ஆகியோரின் அன்பு மாமியாரும், Dr. நாகரட்ணம், திருமதி சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற மயில்வாகனம், திருமதி சிவபாக்கியம், காலஞ்சென்ற இரத்தினசிங்கம், திருமதி இராசாமணி நடராசா (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. சி. நாகரட்ணம்
(சகோதரன்)

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை. [4359]

### திருமதி பொன்னம்பலம் காமாட்சிப்பிள்ளை

அனலைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூர் பண்டாரக்குளம் வீதியை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவி காமாட்சிப்பிள்ளை காலமானார்.

இவர் திருநாவுக்கரசு (முன்னாள் கல்விக்கந்தோர் யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற செல்லத்துரை ஞானாம்பாள் (முன்னாள் ஆசிரியை மங்கையர்க்கரசி வித்தியாலயம்), சதாசிவம் (வர்த்தகர் இலுப்பையடி), இராசம்மா (உருத்திரபுரம்), பரமலிங்கம் (கணக்காளர் துபாய்), பாலசிங்கம் (மாநகர சபை ஊழியர் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், முத்துலட்சுமி (இந்தியா), காலஞ்சென்ற கமலாம்பிகை (அனலைதீவு) மதியாபரணம் (முன்னாள் யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்), கனகாம்பிகை, காலஞ்சென்ற தேவராஜா, அருமைநாயகம், சிவசக்தி, அன்னலட்சுமி (முன்னாள் வீடமைப்புத் திணைக்களம் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (24-10-91) பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் யாவரும் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ. சதாசிவம்
(மகன்)

17/19, பண்டாரக்குளம் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (18145)

### விஸ்வநாதஐயர் மாணிக்கஐயர்

நீர்வேலி விஸ்வநாதஐயர் மாணிக்கஐயர் நேற்று சிவபதம் அடைந்து விட்டார்.

இவர் தேவசேனாதிபதியின் அன்புக் கணவரும், ஜெயபதியின் அன்புத் தந்தையாரும், சோமதேவசர்மாவின் மாமனாரும், வரப்பிரதன், சிவஜெயன், நிதர்சன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று [24-10-91] பகல் 12 மணியளவில் நீர்வேலி மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும்.

தகவல்:
சா. சோமதேவசர்மா
(மருமகன்)

நீர்வேலி மத்தி,
நீர்வேலி. [18147]

## அரசாங்க அதிபரின் அறிவித்தல்

நெருக்கடி கால சூழ்நிலையில் அத்தியாவசிய உணவுப் பொருள்களது விநியோகம், நுகர்வு, கையிருப்பு என்பவை தொடர்பான அவசரக் கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

24-10-1991 வியாழன் இன்று காலை 10.00 மணிக்கு அரசாங்க அதிபரின் செயலகத்தில் எல்லா பிரிவு உதவி அரசாங்க அதிபர்களுக்குமான கலந்துரையாடல் நடைபெறும். அதனைத் தொடர்ந்து மாலை 3.00 மணிக்கு எல்லாப்பிரிவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் அப்பிரிவுக்குரிய கிராம சேவை உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், ப. நோ. கூ. சங்க தலைவர்கள், வர்த்தகர், நுகர்வோர் சங்க பிரதிநிதிகள் ஆகியோருக்கான கலந்துரையாடல்கள் நடைபெறும்.

எனவே மேற்படி கலந்துரையாடல்களுக்கென குறித்துரைக்கப்பட்டவர்கள் உரிய இடங்களில் தவறாது சமூகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

செ. பத்மநாதன்
புனர்வாழ்வு செய்திட்ட பணிப்பாளர்
யாழ். அரசாங்க அதிபருக்காக
யாழ்ப்பாணம்.

(C 0849)

## மரண அறிவித்தல்

### பரமநாதன் குசநாதன்

[ஆண்டு 4 புனிதயோன் பொஸ்கோ வித்தியாலயம்]

கொட்டடி சீனிவாசகம் வீதியைச் சேர்ந்த பரமநாதன் குசநாதன் [ஆண்டு 4 புனிதயோன் பொஸ்கோ வித்தியாலயம்] (23-10-91) புதன்கிழமை காலமானார். அன்னார் திரு. சின்னத்தம்பி பரமநாதன் [நாதன் ஸ்ரோர்ஸ் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்], திருமதி பரமநாதன் சியாமளா [வாசுகி] ஆகியோரின் புதல்வனும் லவநாதன் [ஆண்டு 5 புனிதயோன் பொஸ்கோ வித்தியாலயம்], நிஷநாதன் [ஆண்டு 2 புனிதயோன் பொஸ்கோ வித்தியாலயம்] ஆகியோரின் அன்புச் சகோதரனும் திரு. திருமதி சின்னத்துரை இராசசெல்லமணி, திருமதி சின்னத்தம்பி சின்னப்பிள்ளை ஆகியோரின் அன்புப் பேரனும் சி. சிவகுமார் [கொலண்ட்] திருமதி பொன்னம்பலம் இராசம்மா, திருமதி தில்லையம்பலம் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மருமகனும் திரு. திருமதி சி. நமசிவாயம் பராசக்தி [சிவகுமார் ஸ்ரோர்ஸ் ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்] இன் அன்பு பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழக்கிழமை (24-10-91) இரண்டு மணிக்கு காவடியில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி, நமசிவாயம்

வேம்படி முருகமூர்த்தி கோவிலடி,
காவடி தெற்கு,
கொக்குவில். [18146]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org